தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com



நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்


RNI-TNTAM/2023/88253









| Vol: 02 | Issue: 42 | 4 Pages | 11.9.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 42 | 4 பக்கங்கள் | 11.9.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்**
**எண்ணின் தவத்தான் வரும்**

**விளக்கம்:**
**தீமை செய்யும் பகைவரை அடக்குதலும் நன்மை செய்யும் நண்பரை உயர்த்துதலும் நினைத்த அளவில் தவத்தின் வலிமையால் உண்டாகும்.**

# மாநிலங்களுக்கு நிதி மறுப்பு: மத்திய அரசுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம்



சென்னை, செப். 10

தேசிய கல்விக் கொள்கையை செயல்படுத்த மறுப்பதால் தமிழ் நாட்டிற்கு மத்திய அரசு நிதி வழங்க மறுத்து வருகிறது.

மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரியாக திகழும் தமிழ்நாட்டுக்கு அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்காமல் மத்திய அரசு தாமதப்படுத்தி வருகிறது. அது மட்டுமின்றி தேசிய கல்வி கொள்கையை கட்டாயமாக திணிக்கவும் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இதற்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். கல்வி மற்றும் சமத்துவத்தை ஒன்றிய அரசு ஊக்குவிக்கும் லட்சணம் இதுதானா? என்று அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

கல்வி, சமூக திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்க மறுப்பது பற்றி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு உள்ள சமூக வலைதள பதிவில் கூறி இருப்பதாவது:

சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கான நிதியை மறுப்பது, அதே வேளையில் குறிக்கோள்களில் வெற்றி அடையாதோருக்குத் தாராளமாக நிதி ஒதுக்குவது இப்படித்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு தரமான கல்வியையும் சமத்துவத்தையும் ஊக்குவிக்கத் திட்டமிட்டுள்ளதா?

முடிவை நாட்டுக்கும், நாட்டு மக்களின் புரிதலுக்குமே விட்டுவிடுகிறேன்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## சிவகங்கை மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முதலமைச்சர் கோப்பை2024 போட்டிகளை துவங்கி வைத்தார்






சிவகங்கை:செப் 11

சிவகங்கை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் முதலமைச்சர் 2024 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளை அமைச்சர் உதயநிதி அமைச்சர் பெரியகருப்பன் அரசு கூடுதல் தலைமை செயலாளர் (இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை) அதுல்யமிஸ்ரா, சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தலைமை நிர்வாக அதிகாரி உறுப்பினர் செயளாலர் ஜெ.மேகநாத ரெட்டி, சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவீன் உமேஷ் டோங்கரே,சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசிரவிக்குமார் எஸ். மாங்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆ.ரா.சிவராமன் , மாவட்ட விளையாட்டு அலுவலர் ரமேஷ் கண்ணன் உட்பட சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

காலை 10மணி அளவில் துவங்கிய போட்டிகளில் மாநில அளவில் தனிநபர் மற்றும் குழு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1.இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரமும்,மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரமும் வழங்கப்படவுள்ளது. குழு போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.75 ஆயிரமும், இரண்டாம் பரிசாக தலா ரூ.50 ஆயிரமும், மூன்றாம் பரிசாக தலா ரூ.25ஆயிரமும் வழங்கப்படவுள்ளது. இந்த ஆண்டிற்க்கான தனிநபர் மற்றும் குழு போட்டிகளுக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.37 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டது தனி சிறப்பு.வெற்றி பெற்றவர்களுக்கு போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள்மூலம் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் முன்னுரிமையும் சலுகைகளும் வழங்கப்படும்.

சிவகங்கையில் நடைபெற்ற இந்த போட்டிகளில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 12 வயது முதல் 19 வயது வரை உள்ள பள்ளி மாணவ மாணவிகளும் 17 வயது முதல் 25 வயது வரை கல்லூரி மாணவர்களும் 15 வயது முதல் 35 வயது வரை பொது பிரிவினருக்கும், அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும், விளையாட்டுப் போட்டிகள் இணையதளத்தின் வாயிலாக முன்பதிவு செய்துள்ளதன் அடிப்படையில், நடத்தப்படவுள்ளது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி, தோல்விகள் என்பதை கருத்தில் கொள்ளாமல், முதலில் நாம் அதில் பங்கு கொள்வதை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் பல்வேறு போட்டிகளில் பங்கு கொள்வதன் அடிப்படையில், தங்களது திறன்களை வெளிக்கொணருவதற்கான வாய்ப்பாக அவை அமையும். இதனைக் கருத்தில் கொண்டு தங்களுக்கு விருப்பமான விளையாட்டுப் போட்டிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அதில் வெற்றி பெற்று, அதன்மூலம் தங்களது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

## செஞ்சியில் 150 நபர்களுக்கு குடும்ப அட்டைகள்: அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்




செஞ்சி செப் 11

விழுப்புரம் மாவட்டம்செஞ்சி தாலுகாவில்குடும்ப அட்டை வேண்டிவட்ட வழங்கல் அலுவலகத்தில் கோரிக்கைமனு வழங்கியவர்களின் மனுக்கள் பரிசீலனை செய்து முதல் கட்டமாக 150 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் நிகழ்ச்சி வருவாய் துறை சார்பில் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார் .செஞ்சி வட்டாட்சியர் ஏழுமலை முன்னிலை வகித்தார் .வட்ட வழங்கல் அலுவலர் திருமதி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முதல் கட்டமாக 150 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்ற தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் ஏழை மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் பெண் பிள்ளைகள் உயர்கல்வி படிப்பதற்கு புதுமைப் பெண் திட்டத்தை உருவாக்கி மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கி வருகிறார் குடும்பப் பெண்களின் பொருளாதாரம் உயர்வதற்கு அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமை தொகையை வழங்கி வருகிறார் அந்த வகையில் செஞ்சி தாலுகாவில் குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களின் கோரிக்கை மனுக்கள் பரிசீலனை செய்து முதற் கட்டமாக 150 பயணிகளை தேர்வு செய்து அவர்களுக்கு முதலமைச்சரின் உத்தரவுப்படி இன்று மின்னணு குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்களின் கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய ஒரு முதலமைச்சரை நாம் பெற்றுள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் சத்தியமங்கலம் வருவாய் ஆய்வாளர்கள் சத்யா, கோவிந்தன்,வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர்துரை, ஊராட்சி மன்ற தலைவர்கள் அனையேரி ரவி,பிலால்,கிராம நிர்வாக அலுவலர்கள்,நிர்வாகிகள் வாசு, அய்யாதுரை, தொண்டரணி பாஷா,செந்தில், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பாஜக விழுப்புரம் மாவட்ட சுற்றுச்சூழல் பிரிவு தலைவர் பிறந்தநாள் கொண்டாட்டம்



விழுப்புரம், செப். 11

விழுப்புரம் மாவட்டம் பாஜக சுற்றுச்சூழல் பிரிவு தலைவர், சமூக ஆர்வலர் மற்றும் தொழிலதிபர் NRK (எ) N.ராதாகிருஷ்ணன் பிறந்தநாளை முன்னிட்டு வள்ளலார் கோவிலில் அன்னதானம், ஆதரவற்ற குழந்தைகள் உள்ள ஆசிரமத்திற்கு சென்று உணவு வழங்கினார்

அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்ள நோயாளிகளுக்கு சத்து மிகுந்த பழங்களை வழங்கினார். பின்னர் திருவண்ணாமலை மெயின் உள்ள அவர் இடத்தில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

இந்தநிகழ்ச்சியில் பிஜேபி மாநில, மாவட்ட, வட்டத்தில் உள்ள தலைவர்கள் நிர்வாகிகள, தொழிலதிபர்கள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.பின்னர் கேட் வெட்டப்பட்டு அனைவரும் வழங்கப்பட்டது.

## ரோட்டரி சமுதாய குழுமம் சார்பாக உலக பேனா தினம் கொண்டாட்டம்



விழுப்புரம், செப். 11

அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் சார்பாக உலக பேனா தினம் அனந்தபுரம் S.P.பாராமெடி க்கல் சயின்ஸ் கல்லூரியில் கொண்டாடப்பட்டது.

அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் முன்னாள் தலைவர் விக்கிரவாண்டி தாலுகா நுகர்வோர் கண்காணிப்பு குழு உறுப்பினர் ஜேசு ஜூலியஸ் ராஜா தலைமை தாங்கினார். தாளாளர் பச்சையப்பன் முன்னிலை வகுத்தார். உலக பேனா தினத்தை முன்னிட்டு பேனாவை பற்றி கல்லூரி மாணவிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது பின்னர் அனைத்து மாணவிகளுக்கும் பேனாவை ரோட்டரி சமுதாய குழுமம் ஜேசு ஜூலியஸ் ராஜா வழங்கினார்.இந்த நிகழ்ச்சிக்கு ஆசிரியை ரேவதி மற்றும் மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

## வியட்நாமை புரட்டி போட்ட சூறாவளி புயல்; 87 பேர் பலி



ஹனோய், செப். 11

வியட்நாம் நாட்டில் பல தசாப்தங்களாக இல்லாத வகையில் சமீபத்தில் உருவான யாகி சூறாவளி புயல் கடுமையாக தாக்கியது. இந்த சூறாவளி புயல் கடந்த சனிக்கிழமை கரையை கடந்தபோது, மணிக்கு 149 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியது.

இதில் 9 பேர் உயிரிழந்தனர். இதன்பின் கடந்த ஞாயிறன்று, சூறாவளி வலுவிழந்தது. ஆனால், தொடர்ந்து மழை பெய்து வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால், மக்களின் வாழ்க்கையை சூறாவளி புரட்டி போட்டு விட்டு சென்றுள்ளது.

இதன் பாதிப்புகளில் சிக்கி இதுவரை 87 பேர் உயிரிழந்து உள்ளனர். 70 பேரை காணவில்லை. நூற்றுக்கணக்கானோர் காயமடைந்து உள்ளனர். வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஆகியவற்றால் பலர்உயிரிழந்து உள்ளனர்எனஅந்நாட்டுஅரசுஊடகம்தெரிவித்துஉள்ளது.வியட்நாமை தாக்குவதற்கு முன்பு, தெற்கு சீனா மற்றும் பிலிப்பைன்சில் இந்த சூறாவளி புயல் தாக்கியதில் 24 பேர் பலியானார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

## கிழக்கு திமோரில் போப் பிரான்சிஸ் நடத்திய பிரார்த்தனை கூட்டத்தில் 6 லட்சம் பேர் பங்கேற்பு



டிலி, செப். 11

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொ ண்டுள்ள போப் பிரான்சிஸ் பப்புவா நியூ கினியா விலிருந்து கிழக்கு திமோர் நாட்டிற்குச் சென்றார். அந்நாட்டின் ஜனாதிபதி ஜோஸ் ராமோஸ் மற்றும் பிரதம மந்திரி சனானா குஸ்மாவோ ஆகியோர் விமான நிலையத்தில் போப்பை வரவேற்றனர்.

போப் பிரான்சிஸ் வருகையை முன்னிட்டு கிழக்கு திமோரின் தலைநகர் டிலியில்திரண்ட அந்நாட்டு மக்கள், மஞ்சள்மற்றும் வெள்ளைநிற குடைகளை அசைத்தபடி வழிநெடுகிலும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். போப் பிரான்சிசை காண்பதற்காக குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை ஏராளமானோர் திரண்டு வந்தனர்.

அங்குள்ள டாசிடோலு அமைதி பூங்காவில் போப் பிரான்சிஸ் பிரார்த்தனை கூட்டம் நடத்தினார். கிழக்கு திமோர் நாட்டின் மொத்த மக்கள் தொகை 13 லட்சம் ஆகும். இதில் 98 சதவீதம் பேர் கத்தோலிக்கர்களாக உள்ளனர். இந்நிலையில் போப் பிரான்சிஸ் நடத்திய பிரார்த்தனை கூட்டத்தில் சுமார் 6 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பங்கேற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியமக்கள்தொகைவிகிதத்தின்அடிப்படையில்,ஒருபோப்ஆண்டவரின் பிரார்த்தனை நிகழ்ச்சியில் அதிக அளவிலான மக்கள் கலந்து கொண்டிருப்பது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது. இந்த பிரார்த்தனை கூட்டத்தில் பேசிய போப் பிரான்சிஸ், கிழக்கு திமோரில் அதிக குழந்தைகள் இருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகவும், அவர்களுக்கு அமைதியான, ஆரோக்கியமான குழந்தைப் பருவம் கிடைப்பதை அரசியல் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

1975ல் கிழக்கு திமோர் மீதான தனது காலனி ஆதிக்கத்தை போர்ச்சுக்கல் கைவிட்டது. இதைத் தொடர்ந்து இந்தோனேசியா படையெடுத்து திமோரை கைப்பற்றியது. உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றான கிழக்கு திமோர், 25 ஆண்டுகளுக்கு முன்பு இந்தோனேசியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.

இந்தோனேசியாவுக்கு எதிரான சுதந்திர போராட்டத்தில் சுமார் 2 லட்சம் பேர் கொல்லப்பட்டனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் உடல்கள் டாசிடோலு பகுதியில் புதைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அந்த இடம் தற்போது அமைதி பூங்காவாக அறியப்படுகிறது. அந்த இடத்தில்தான் போப் பிரான்சிஸ் இன்று பிரார்த்தனை கூட்டம் நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## குழந்தைகள் சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்க ஆஸ்திரேலியா முடிவு

கான்பெர்ரா, செப். 11

குழந்தைகள் தற்போது செல்போன் மற்றும் சமூக வலைதளங்களான இன்ஸ்டா, பேஸ்புக் பயன்படுத்துவது அதிகரித்து உள்ளது. இந்தநிலையில், ஆஸ்திரேலியாவில் குழந்தைகள் சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்நாட்டு பிரதமர் அந்தோனி அல்பானீஸ் கூறியதாவது:

குழந்தைகளை அவர்களின் செல்போன் உள்ளிட்ட சாதனங்களில் இருந்து விலக்கி விளையாட்டு மைதானங்கள், நீச்சல் குளங்கள், டென்னிஸ் மைதானங்களில்பார்க்கவிரும்புகிறேன்.அவர்கள்உண்மையானநபர்களுடன் உண்மையான அனுபவங்களைப் பெற வேண்டும் என்று விரும்புகிறோம். ஏனென்றால் சில சமூக ஊடகங்கள் தீங்கு விளைவிப்பதாக இருக்கிறது.

சமூக ஊடகங்களில் உள்ள தகவல்கள் குழந்தைகளின் மன ஆரோக்கியத்தில் தாக்கங்கள், அவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் இருப்பது கவலை அளிக்கிறது.

எனவே குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் சட்டத்தை இந்த ஆண்டு அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. எந்த வயது குழந்தைகளுக்கு தடை விதிப்பது என்பது குறித்து வயது சரிபார்ப்பு சோதனை விரைவில் தொடங்கப்படும். குறைந்தபட்ச வயது 16 ஆக நிர்ணயிப்பதே தனது விருப்பம். இது உலகளாவிய பிரச்சினை. இதில் தீர்வு காணஉலகெங்கிலும்உள்ளஅரசாங்கங்கள்முயற்சிகளைஎடுத்துவருகின்றன.

கடந்த மாதம் ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கழகம் நடத்திய கருத்துக் கணிப்பின்படி, 61 சதவீதம் ஆஸ்திரேலிய மக்கள் 17 வயதுக்குட்பட்டோர் சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை செய்ய வேண்டும் என்று ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# இந்தியை திணித்தது யார்..? ராகுலுக்கு அண்ணாமலை கேள்வி




சென்னை, செப். 11

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, தனது 'எக்ஸ்' சமூகவலைதள பக்கத்தில் பதிவில் கூறியிருப்பதாவது:

எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி இந்தி திணிப்பு தொடர்பாக நடைமுறையில் இல்லாத விஷயங்களை கூறுகிறார். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி உருவாக்கிய முதல் தேசிய கல்விக் கொள்கையில், அனைத்து இந்தியர்களுக்கும் இந்தி கட்டாயம் என கூறப்பட்டது. 2வதாக முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி உருவாக்கி தேசியக் கல்விக் கொள்கையில் இந்தியர்கள் அனைவருக்கும் பொதுவான மொழியாக இந்தியை உருவாக்கும் வகையில், அதை கற்கவும், பயன்படுத்தவும் ஊக்க அளிக்கப்பட்டது.

ஆனால், பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசின் தேசிய கல்விக் கொள்கை 2020ல், தாய் மொழி கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நாட்டின் அனைத்து மக்கள் மீதும் இந்தியை திணித்தது யார்? பிரதமர் மோடியா அல்லது காங்கிரஸ் கட்சியா?.

பிரதமர் மோடி தாய் மொழிக்கு என்ன செய்தார் என்று கேள்வி எழுப்பலாம். என்னுடைய தாய் மொழி தமிழ் மொழிக்கு பிரதமர் மோடி பல்வேறு பெருமைகளை சேர்த்துள்ளார்.

ஐ.நா. சபையில் முதல் முறையாக தமிழ் மொழியில் பேசிய பிரதமர் என்ற பெயரை பெற்றவர் மோடி. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என ஐ.நா சபையில் உரையாற்றினார். மேலும், பாரதியாரின் நினைவாக அவரது பிறந்த நாள், டிசம்பர் 11 ந்தேதியை தேசிய மொழிகள் தினமாக அறிவித்தார்.

காசி தமிழ் சங்கம் மற்றும் சவுராஷ்டிர தமிழ் சங்கம் ஆகிய இரண்டு கலாச்சாரங்களின் சங்கமத்தை உருவாக்கினார். திருக்குறளை குறைந்தது 100 மொழிகளில் வெளியிட வேண்டும் என்ற லட்சியத்தின் ஒரு பகுதியாக 13 மொழிகளில் திருக்குறளை வெளியிட்டார். செங்கோலை பாராளுமன்றத்தில் நிறுவினார். முன்பு எப்போதும் இல்லாத வகையில், தமிழின் பெருமையை உலகம் முழுவதும் பிரதமர் மோடி எடுத்து சென்றுள்ளார்.

தமிழ் மொழியின் செம்மொழி அந்தஸ்தை மேம்படுத்துவதற்காக, ரூ.24 கோடி செலவில் செம்மொழித் தமிழ் மத்திய நிறுவனத்தின் (CICT) புதிய வளாகத்தை நமது பிரதமர் திறந்து வைத்தார். வட இலங்கையில் தமிழ் கலாச்சாரம் மற்றும் வரலாற்றைப் பாதுகாக்க, நமது பிரதமர் அவர்கள் ரூ.120 கோடியில் யாழ்ப்பாணக் கலாச்சார மையத்தை நிர்மாணிக்க அனுமதித்தார்.

நமது பிரதமர் 2023ம் ஆண்டு ஜூலை மாதம் தனது சுற்றுப்பயணத்தின்போது பிரான்சின் செர்ஜி நகரில் புனித திருவள்ளுவருக்கு ஒரு சிலையை அறிவித்தார்,

அது டிசம்பர் 2023 இல் நிறுவப்பட்டது. சிங்கப்பூரில் திருவள்ளுவர் பண்பாட்டு மையம் அமைக்கப்படும் என்ற சமீபத்திய அறிவிப்பு வெளியாகி உள்ளது. பிரதமர் மோடி பிராந்திய மொழிகளை வளர்க்க மேற்கொண்ட நடவடிக்கைகளில் 10 சதவீதம் கூட காங்கிரஸ் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வீடுகள் முன்பு நோ பார்க்கிங் போர்டு வைக்க தடை




சென்னை, செப். 11

சென்னையில் மோட்டார் வாகனங்கள் நிறுத்துவதைத் தடுக்கும் வகையில், பொது இடங்களில் 'நோ பார்க்கிங்' பலகைகள், தடுப்புகள் அல்லது மணல் மூட்டைகள் அமைக்கக் கூடாது என தனியார் கட்டிடங்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் சென்னையில் வீடுகளின் முன் அனுமதியின்றி 'நோ பார்க்கிங் ' போர்டுகள், தடுப்புகளை வைத்திருப்போர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. மேலும் இதுகுறித்த விதிமுறைகளை பத்திரிகை, ஊடகம் மற்றும் இணையதளம் வழியே வெளியிடவும் காவல் ஆணையருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்னையில் பல வீடுகளின் முன் அனுமதியின்றி வைத்துள்ள நோ பார்க்கிங் போர்டுகள், பூந்தொட்டிகளையும் அகற்ற கோரி நந்தகுமார் என்பவர் தொடர்ந்த வழக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# பனை மரத்தில் இருந்து "கள்" இறக்க உரிமம் வழங்க வேண்டும்: தமிழக அரசுக்கு கோரிக்கை




சென்னை, செப். 11

கல்பாக்கம் அடுத்த முகையூர் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள கனகபுரீஸ்வரர் கோயில் அருகில் கிராமணி மக்கள் முன்னேற்ற சங்கத்தின் முதல் மாநில மாநாடு அதன் மாநில தலைவர் கே.வி.எஸ்.சரவணன் தலைமையில் நடைபெற்றது.

இதில் முக்கிய கோரிக்கையாக, கள் இறக்க அனுமதி, அதை பதப்படுத்தி வைக்க குளிரூட்டும் மையம், அரசு சார்பில் ம.பொ.சிக்கு சென்னையில் மணி மண்டபம் அமைக்க வேண்டும், ம.பொ.சி பெயரில் அரசு விருது கொடுக்க வேண்டும், கள்ளுக்கடை திறக்க வேண்டும், பதநீர் இறக்கும் பனைமர தொழிலாளர்கள் மற்றும் உரிமையாளர்களை போலீசார் கைது செய்யக்கூடாது, பனை, தெண்ணை மரங்களில் இருந்து தொழிலாளி விழுந்து இறந்தால் அரசு 10லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும், பதநீர் மதிப்பு கூட்டு பொருட்கள் தயாரிக்கும் தொழில் கூடங்கள் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களை முன்வைத்து அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரிய தலைவர் எர்ணாவூர் நாராயணன் கூறுகையில், " காமராஜரும் ம.பொ.சியும் நாணயத்தின் இரு பக்கங்கள். விரைவில் ம.பொ.சிக்கு மணிமண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அண்டை மாநிலங்களில் கள் இறக்க அரசு உரிமம் வழங்கியது போல் தமிழக அரசும் கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்க வேண்டும்" என்றார்.

தமிழ்நாடு நிலதரகர்கள் நலச்சங்க தலைவர் விருகை வி.என்.கண்ணன், முகையூர் கண்ணன், உதயகுமார், சிவ கண்ணன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் உறுப்பினர் என 1000க்கும் மேற்பட்டோர் மாநாட்டில் பங்கேற்றனர்.

# 78 நிமிடங்கள் விடாமல் சிலம்பம் சுற்றி உலக சாதனை நிகழ்த்திய 1200 மாணவர்கள்



அருவங்காடு, செப். 11

நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் கண்டோன்மென்ட் மைதானத்தில் தேசிய சிலம்ப பள்ளிகள் கூட்டமைப்பு மற்றும் வஜ்ரம் விளையாட்டு மேம்பாட்டு கூட்டமைப்பு சார்பில் சிலம்பத்தை ஊக்குவிக்கும் விதமாக 78வது சுதந்திர தினத்தை ஒட்டி 78 நிமிடங்கள் விடாமல் சிலம்பம் சுழற்றி ராயல்புக் உலக சாதனை நிகழ்த்துவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது.

வெலிங்டன் கண்டோன் மென்ட் வாரிய முதன்மை நிர்வாக அதிகாரி வினித் லோட்டே சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

அப்போது அவருக்கு பேண்ட் வாத்தியம் முழங்க சிறப்பாக வரவேற்புஅளிக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற உலக சாதனை நிகழ்ச்சியில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் இருந்து சுமார் 1200 மாணவமாணவிகள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டு 78 நிமிடங்கள் சிலம்பம் சுழற்றி சாதனை நிகழ்த்தினர்.

அப்போது வீரர் வீராங்கனைகள் கண்ணை கட்டியும், பானைகள் மீது நின்றும் சிலம்பம் சுழற்றியது பார்வையாளர்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

மேலும் ஆண்களுக்கு இணையாக பெண்களும், மாற்றுத்திறனாளிகளும், பயிற்சி ஆசிரியர்களும் விடாமல் சிலம்பம் சுழற்றி ராயல்புக் உலக சாதனையில் இடம்பிடித்தனர்.

குன்னூர் சிலம்ப சாதனை நிகழ்ச்சியில் பரதநாட்டியம், கராத்தே, கேரம் போர்டு, ஓவியம், சதுரங்கம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளும் நடத்தப்பட்டது. பின்னர் வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசுகள், கேடயங்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# நெல்லையில் புரட்டாசி சனிக்கிழமைகளில் நவதிருப்பதி செல்ல சிறப்பு பஸ்கள்




நெல்லை, செப். 11

புரட்டாசி மாதம் பிறப்பதையொட்டி நெல்லையில் இருந்து நவ திருப்பதி கோவில்களுக்கு சென்று வர போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.

அதன்படி நவ திருப்பதி கோவில்களான ஸ்ரீவைகுண்டம், நத்தம், திருப்புளியங்குடி, இரட்டை திருப்பதி(2), பெருங்குளம், தென்திருப்பேரை, திருக்கோளூர், ஆழ்வார் திருநகரி ஆகிய இடங்களுக்கு இயக்கப்படுகிறது.

அந்த வகையில் புரட்டாசி மாத சனிக்கிழமைகளான வருகிற 21, 28ந் தேதி அடுத்தமாதம் 5, 12ந் தேதி ஆகிய 4 நாட்கள் சிறப்பு பஸ்கள் இயக்க தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக நெல்லை மண்டலம் தகுந்த ஏற்பாடுகளை செய்துள்ளது.


இந்த சிறப்பு பஸ்களானது புரட்டாசி மாத சனிக்கிழமை காலை 7 மணிக்கு நெல்லை புதிய பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு நவ திருப்பதிகளுக்கு சென்று பின்னர் இரவில் மீண்டும் புதிய பஸ் நிலையம் வந்து சேரும்.

இதற்காக ஒரு நபருக்கு கட்டணம் ரூ.500 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக முன்புதிவு செய்ய விரும்புவோர் நெல்லை புதிய பஸ் நிலையம், தென்காசி மற்றும் சங்கரன்கோவில் பஸ் நிலையங்களில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை கட்டண தொகையை முழுமையாக செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளலாம்.

அல்லது அரசு போக்குவரத்து கழக இணையதளம் www.tnstc.in மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

இத்தகவலை அரசு போக்குவரத்து கழக நெல்லை மண்டல மேலாளர் சரவணன் தெரிவித்துள்ளார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 11,736 கன அடியாக குறைந்தது



மேட்டூர், செப். 11

கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து அங்குள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் ஆகிய அணைகளில் இருந்து உபரிநீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்படுகிறது.

இந்த நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வந்த மழை தணிந்துள்ளது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 18,553 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 16,194 கன அடியாக சரிந்தது. தொடர்ந்து இன்றும் நீர்வரத்து குறைந்து விநாடிக்கு 11,736 கனஅடி வீதம் தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது.

அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு 19ஆயிரம் கன அடி வீதமும், கிழக்குமேற்கு கால்வாய் பாசனத்திற்கு 700 கன அடி வீதமும் தண்ணீர் காவிரி ஆற்றில் திறக்கப்பட்டு வருகிறது. நீர்வரத்தை காட்டிலும் தண்ணீர்திறப்பு அதிகமாக இருப்பதால் நேற்று முன் தினம் 116.12 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை 115.93 அடியாக குறைந்தது. தொடர்ந்து இன்று காலை 8 மணிக்கு 115.45 அடியானது. நீர் இருப்பு 86.39 டி.எம்.சி. உள்ளது.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 12 ஆயிரம் கனஅடியாக சரிவு



ஒகேனக்கல், செப். 11

கர்நாடக மற்றும் கேரளா காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்தது. இதன் காரணமாக கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி கிருஷ்ணராஜ சாகர் அணைகள் முழுமையாக நிரம்பி உபரி நீர் தமிழகத்திற்கு திறந்து விடப்பட்டது.

இந்த நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைவு காரணமாக நேற்று ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து கடந்த இரு தினங்களாக வினாடிக்கு 19 ஆயிரம் கனஅடியாக நீடித்து வந்தது.

இந்த நீர்வரத்தானது நேற்று காலை வினாடிக்கு 14 ஆயிரம் கன அடியாக சரிந்தது. இன்று காலை 8 மணி நிலவரப்படி மேலும் சரிந்து வினாடிக்கு 12 ஆயிரம் கன அடியாக குறைந்து வந்து கொண்டிருக்கிறது.


நீர்வரத்து குறைந்த போதிலும் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி ஆகிய அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

இந்த நீர்வரத்தை கர்நாடகா தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பதும் குறைவதுமாக உள்ளதால் அருவியில் குளிக்க விதிக்கப்பட்ட தடையாக தொடர்ந்து 8வது நாளாக நீடிக்கிறது.

தொடர் விடுமுறை காரணமாக நேற்று ஏராளமான சுற்றுலா பயணிகள் ஒகேனக்கல்லக்கு குவிந்தனர். பரிசலில் சவாரி செய்து மகிழ்ந்தனர்.

அருவி மற்றும் காவிரி ஆற்றில் குளிக்க தடை விதிக்கப்பட்டதால், சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

# பவானிசாகர் அணைக்கு 639 கன அடியாக நீர்வரத்து குறைந்தது



ஈரோடு, செப். 11

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும், விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி உள்ளது.

பவானிசாகர் அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. கடந்த சில நாட்களாக பவானிசாகர் அணையில் இருந்து தொடர்ந்து நீர்வரத்தை விட பாசனத்திற்காக அதிக அளவு நீர் திறக்கப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம் சரிய தொடங்கியுள்ளது.

இன்று காலை பவானி சாகர் அணைக்கு வினாடிக்கு 639 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இன்றுகாலைநிலவரப்படி பவானி சாகர் அணை நீர் மட்டம் 95.25 அடியாக உள்ளது. குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 100 கன அடியும், தடப்பள்ளிஅரக்கன் கோட்டை பாசனத்திற்கு 750 கன அடியும், காளிங்கராயன் வாய்க்கால் பாசனத்திற்கு 100 கன அடியும் திறக்கப்பட்டுள்ளது.

இதைப்போல் கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு 2 ஆயிரத்து 300 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. மொத்தம் 3 ஆயிரத்து 250 கன அடி தண்ணீர் பவானி சாகர் அணையில் இருந்து திறந்து விடப்பட்டு வருகிறது. இதேபோல் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருவதன் காரணமாக குண்டேரிப்பள்ளம், வரட்டுபள்ளம் அணை தனது முழு கொள்ளளவை நெருங்கி வருகிறது.

41.75 அடி கொள்ளளவு கொண்ட குண்டேரிபள்ளம் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 40.38 அடியாக உள்ளது. இதே போல் 33.47 அடி கொள்ளளவு கொண்ட வரட்டுபள்ளம்அணையின்நீர்மட்டம் இன்றுகாலைநிலவரப்படி 33.17 அடியாக உள்ளது.

# விநாயகர் சிலையில் வைத்து வழிபட்ட லட்டு ரூ.1½ லட்சத்துக்கு ஏலம்

உசிலம்பட்டி, செப். 11


மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே மலைப்பட்டி கிராமத்தில் விநாயகர் சதுர்த்தியையொட்டி விநாயகர் சிலை வைத்து வழிபாடு நடத்தப்பட்டது. மேலும் விநாயகர் கையில் லட்டு வைத்து பூஜைகள் நடந்தன. நேற்று இந்த சிலையை எடுத்துச்சென்று அருகில் உள்ள கண்மாயில் கரைத்தனர்.

முன்னதாக சிலையில் வைத்து பூஜை செய்யப்பட்ட லட்டு கிராம மக்கள் சார்பில் ஏலம் விடப்பட்டது. இந்த ஏலத்தில் அதே ஊரை சேர்ந்த மூக்கன் (வயது 45) என்பவர், ஒரு லட்டை ரூ.1 லட்சத்து 51 ஆயிரத்துக்கு ஏலம் எடுத்தார்.

இதனால் ஆச்சரியம் அடைந்த கிராம மக்கள் இனி ஒவ்வொரு ஆண்டும் இதே போன்று விநாயகர் சிலையில் வைத்து பூஜை செய்யப்படும் லட்டு ஏலம்விடப்படும்எனவும், இந்த ஆண்டு ஏலம் எடுத்த மூக்கனுக்கு அடுத்த ஆண்டு 1 பவுன் தங்க மோதிரம், 10 வேட்டி, சட்டை, 5 சேலைகள் பரிசாக வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளனர்.

லட்டை ஏலம் எடுத்த மூக்கன் வெளியூரில் முறுக்கு வியாபாரம் செய்து வருகிறாராம்.

# வாழப்பாடி அருகே கூட்டம் கூட்டமாக திரியும் மயில்கள்: மகசூல் பாதிப்பால் விவசாயிகள் கவலை



வாழப்பாடி, செப். 11

சேலம் மாவட்டம் வாழப்பாடி, பேளூர், படையாச்சியூர், புழுதிக்குட்டை, பெரிய குட்டிமடுவு, கொட்டவாடி, கல்லாயணகிரி, சிங்கிபுரம், சோமம்பட்டி, இடையப்பட்டி, கல்லேரிப்பட்டி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் வனப்பகுதிகள் ஆறு, ஏரி, நீரோடை உள்ளிட்ட நீர்நிலைகள், மலை குன்றுகள், தரிசு நிலங்களில் மட்டுமின்றி,கிராமப்புறங்களில் விவசாயிகளின் விளைநிலங்களிலும், கடந்த சில ஆண்டுகளாக மயில்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது.

இதனால் விளை நிலங்களில் மட்டுமின்றி குடியிருப்பு பகுதிகளிலும் கூட மயில்கள் சர்வ சாதரணமாக கூட்டம் கூட்டமாய் திரிகின்றன.

விளைநிலங்களில் நெல், கம்பு, சோளம், மக்காச்சோளம் உள்ளிட்ட உணவு தானியங்கள் மற்றும் பிற விவசாய விளை பொருட்கள் பயிரிடப்படுகிறது. இவற்றை மயில்கள் சேதப்படுத்துவதால் மகசூல் பாதிக்கப்படுகிறது.

குறிப்பாக, படையாச்சியூர், கொட்டவாடி கிராமங்களில் கூட்டம் கூட்டமாக 100க்கும் மேற்பட்ட மயில்கள் விளைநிலங்களில் வட்டமடித்து பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. இதனால், விவசாயிகள் கவலைஅடைந்துள்ளனர்.

வாழப்பாடி மற்றும் தும்பல் வனச்சரக வனத்துறையினர் மயில்களின் எண்ணிக்கை குறித்து கணக்கெடுப்பு நடத்தி, கிராமப்புற விளைநிலங்களில் பயிர்களை சேதப்படுத்தி வரும் மயில்களை பிடித்து வனப்பகுதியில் விடுவதற்கும் சேலம் மாவட்ட நிர்வாகம் மற்றும் வனத்துறை உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, வாழப்பாடி மற்றும் பெத்தநாயக்கன்பாளையம் வட்டார விவசாயிகளிடையே கோரிக்கை எழுந்துள்ளது.

இதுகுறித்து கொட்டவாடி கிராமத்தை விவசாயிகள்கூறுகையில், விவசாயிகளை வயல்வெளியில் கூட்டமாக உள்ள மயில்கள் சிறிதும் பயமின்றி துரத்துகின்றன. இதனால் மயில்களைக் கண்டால் குழந்தைகள் அருகில் செல்வதற்கு தயங்குகின்றனர். இதற்கு தீர்வு காண சேலம் மாவட்ட நிர்வாகமும், வனத்துறையினரும் இணைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# திருச்சியில் இன்று மாலை விநாயகர் சிலைகள் கரைப்பு: ஊர்வலத்துக்கு கட்டுப்பாடு



திருச்சி, செப். 11

நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. திருச்சி மாவட்டத்திலும் பக்தர்கள் விநாயகர் சதுர்த்தி விழாவை கோலாகலமாக கொண்டாடினர்.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு திருச்சி மாநகரில் 242 இடங்களிலும், புறநகர் பகுதிகளில் 932 இடங்களிலும் என திருச்சி மாவட்டத்தில் மொத்தம் ஆயிரத்து 174 இடங்களில் விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.

இதை தொடர்ந்து விநாயகர் சிலைகள் அனைத்தும் இன்று மாலை ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு காவிரி ஆற்றில் கரைக்கப்பட உள்ளன.

விநாயகர் சிலை கரைப்பதற்கு எடுத்து செல்லும் போது சிலை அமைப்பாளர்கள் மற்றும் சிலை அமைப்பு இயக்கத்தினர் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும்.

சிலை அமைப்பாளர்கள் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லும் விநாயகர் சிலைக்கு உரிய பாதுகாப்பு அளிக்க தனிப்பட்ட தன்னார்வலர்களை நியமிக்க வேண்டும் என்று போலீசார் அறிவுறுத்தி உள்ளனர்.

ஊர்வலத்தின் போது ஒலிப்பெருக்கிகளின் சத்தம் குறிப்பிட்ட டெசிபலுக்கு மிகாமல் ஒலிக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ஊர்வலம் மாலை 3, 4 மணிக்குள் புறப்பட வேண்டும். இரவு 10 மணிக்குள் ஊர்வலத்தை கண்டிப்பாக முடித்துவிட வேண்டும்.

ஊர்வலம் செல்லும் பாதையில் எந்தவொரு இடத்திலும், எக்காரணத்தைக் கொண்டும் ஊர்வலத்தை இடைநிறுத்தம் செய்யாமல், விரைந்து நடத்தி சிலை கரைக்கும் இடம் சென்று சேர வேண்டும்.

ஊர்வலத்தின் போது அமைப்பாளர்கள் அவர்களது குழுவினரை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஊர்வலத்தில் அரசியல் கோஷங்கள், பிற மதத்தினரை புண்படுத்தும் வகையிலான கோஷங்கள் மற்றும் செயல்களில் ஈடுபடக்கூடாது.

மது அருந்தியவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொள்ளாமல் இருப்பதை விழாக்குழுவினர் உறுதி செய்ய வேண்டும். எந்த ஒரு சிறு பிரச்னையும் இன்றி ஊர்வலம் செல்ல உறுதுணையாக இருக்க வேண்டும்.

சிலைகளை கரைக்க கொண்டு செல்லும்போது நான்கு சக்கர வாகனங்களில் மட்டுமே கொண்டு செல்ல வேண்டும்.

3 சக்கர வாகனம் மற்றும் மாட்டு வண்டிகளில் சிலைகளை ஊர்வலமாக எடுத்து செல்லக்கூடாது. பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை விசர்ஜன நிகழ்ச்சியில் பின்பற்ற வேண்டும் என திருச்சி மாநகர போலீஸ் கமிஷனர் காமினி தெரிவித்துள்ளார்.

மேலும் விநாயகர் சிலை கரைக்கப்படும் திருச்சி காவிரி பாலத்தில் கூடுதல் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இரவு 10 மணி வரை சிலைகள் கரைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால், சிலை கரைக்கப்படும் இடத்தில் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் ஒலி, ஒளி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் பாலத்தின் கைப்பிடி சுவர் பகுதிக்கு சென்றுவிடாதபடி சவுக்கு மரங்களை கொண்டு தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

சிலை கரைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பகுதியில் பாலத்தின் கைப்பிடி சுவரை ஒட்டியவாறு மேடை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வாகனங்களில் ஊர்வலமாக கொண்டு வரும் வாகனத்தை மேடையின் அருகே திருப்பி நிறுத்தி, சிலையை அந்த மேடைக்கு மாற்றி, அங்கிருந்து காவிரி ஆற்றில் கரைக்கும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது.

திருச்சி மாநகரத்தில் விநாயகர் சிலை ஊர்வலம் மற்றும் சிலை கரைப்பு நிகழ்வை முன்னிட்டு, திருச்சி மாநகர காவல் ஆணையர் காமினி தலைமையில், 3 காவல் துணை ஆணையர்கள், 1 கூடுதல் காவல் துணை ஆணையர், 8 காவல் உதவி ஆணையர்கள், 41 காவல் ஆய்வாளர்கள், 101 உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல் ஆளிநர்கள் என மொத்தம் 1700 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளார்கள்.

ஊர்வலத்தின்போது முக்கிய சாலை சந்திப்புகள் மற்றும் பிரச்சனைக்குரிய இடங்கள் ஆகியவை கண்டறியப்பட்டு, அவ்விடங்களில் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறா வண்ணம் கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட உள்ளது.

மேலும் விநாயகர் ஊர்வலத்தின்போது பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் எவ்விதஇடையூறின்றி விநாயகர் சிலை ஊர்வலம் செல்வதற்காக, போக்குவரத்து வழித்தடங்களில் சிறிய மாற்றம் செய்யப்பட்டு, விநாயகர் சிலை ஊர்வலமானது அமைதியான முறையில் நடைபெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

திருச்சி புறநகர் மாவட்ட பகுதிகளில் நேற்று முதல் விநாயகர் சிலைகள் நீர்நிலைகளில் கரைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இன்று புத்தாநத்தம் இடையபட்டி விநாயகர் குளத்தில் 17 சிலைகள் கரைக்கப்பட உள்ளது.

பதட்டமான பகுதிகளாக கருதப்படும் துவரங்குறிச்சி மற்றும் புத்தாநத்தம் ஆகிய போலீஸ் சரகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கூடுதல் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுத்தப்பட உள்ளனர்.

மேலும் ஊர்வலத்தில் பிரச்னை ஏற்படுத்தும் நபர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு வருண் குமார் தெரிவித்துள்ளார்.

முன்னதாக புத்தாநத்தம் காளியம்மன் கோவில் பகுதியில் இருந்து புத்தாநத்தம் பஜார், ஜும்மா மசூதி வழியாக ஊர்வலமாக சென்று அந்தக் குளத்தில் சிலைகள் விஜர்சனம் செய்யப்படுகிறது.

இதையடுத்து அங்கே 200க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்திற்கு சீல்





கிண்டி, செப். 11

சென்னை கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்திற்கு வருவாய்த்துறையினர் சீல் வைத்தனர்.

நீதிமன்ற உத்தரவின்பேரில் இன்று காலை கிண்டி தாசில்தார் தலைமையிலான அதிகாரிகள் 160 ஏக்கர் கொண்ட கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்திற்கு சீல் வைத்தனர். நிலுவைத் தொகை பாக்கி காரணமாக கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

ரேஸ் கோர்ஸ் நிர்வாகம் பல ஆயிரம் கோடி ரூபாய் வரி பாக்கியை செலுத்தவில்லை என புகார் எழுந்ததையடுத்து சென்னை ஐகோர்ட் உத்தரவின்பேரில் வருவாய்த்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

# பொங்கல் பண்டிகைக்கான ரெயில் டிக்கெட் முன்பதிவு நாளை தொடக்கம்



சென்னை, செப். 11

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி, பொங்கல் பண்டிகை காலங்களில் பண்டிகையை கொண்டாட சென்னையில் இருந்து சுமார் 6 லட்சத்திற்கும் மேற்பட்டோர் தங்களின் சொந்த ஊர்களுக்கு செல்வார்கள். இதில், பெரும்பாலானோர் ரெயிலில் முன்பதிவு செய்து பயணம் செய்வார்கள்.

பயணிகளின் வசதிக்காகவும், கடைசி நேர கூட்ட நெரிசலை தவிர்க்கவும் ரெயில்டிக்கெட்முன்பதிவு 120 நாட்களுக்கு முன்பே தொடங்கும்.

அடுத்த ஆண்டு ஜனவரி 13ந்தேதி (திங்கட்கிழமை) போகி பண்டிகை, 14 ந்தேதி பொங்கல் பண்டிகை (செவ்வாய்க்கிழமை), 15ந்தேதி மாட்டுப் பொங்கல் (புதன்கிழமை), 16ந்தேதி (வியாழக்கிழமை) காணும் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

இதை முன்னிட்டு, சொந்த ஊர்களுக்கு செல்வோர் வசதிக்காக, ரெயில் டிக்கெட் முன்பதிவு வரும் 12ந்தேதி முதல் தொடங்குகிறது.

அந்த வகையில், ஜனவரி 10 ந்தேதி பயணம் செய்ய விரும்புவோர் செப்டம்பர் 12ந்தேதியும், ஜனவரி 11ந்தேதிக்கு பயணம் செய்ய 13ந்தேதியிலும், ஜனவரி 12ந்தேதிக்கு வரும் 14ந்தேதியும் டிக்கெட் முன்பதிவு செய்து பயணம் செய்யலாம்.

ஜனவரி 13ந்தேதி போகி பண்டிகை அன்று பயணம் செய்ய விரும்பும் பயணிகள் வரும் 15ந்தேதியும் முன்பதிவு செய்து பயணம் செய்யலாம்.

ஐ.ஆர்.சி.டி.சி., இணையதளம் வாயிலாகவும், டிக்கெட் முன்பதிவு மையங்களிலும் டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ளலாம் என்று தெற்கு ரெயில்வே தகவல் தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் முதியோர் காப்பகங்கள்: அரசுக்கு ஐகோர்ட்டு உத்தரவு

மதுரை, செப். 11

தூத்துக்குடி பகுதியைச் சேர்ந்த அதிசயகுமார், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "தமிழகத்தில் திருச்செந்தூர், ராமேஸ்வரம், மதுரை, கன்னியாகுமரி, வேளாங்கண்ணி பகுதியில் உள்ள கோவில் வளாகங்கள், பேருந்து நிலையங்களில் ஆதரவற்ற முதியவர்கள் பலர் ஆங்காங்கே ஆதரவின்றி தங்கியுள்ளனர். இவர்களை பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நல பராமரிப்பு சட்டம் 2009ன் படி தமிழகம் முழுவதும் மாவட்டம் தோறும் ஆதரவற்றோர் முதியோர் காப்பகம் அமைத்து பாதுகாக்க உரிய உத்தரவு பிறப்பிக்கவேண்டும்

தமிழகத்தில் 2021ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 13.6 சதவீதம் மூத்த குடிமக்கள் உள்ளனர். இது, 2031ம் ஆண்டில் 18.2 சதவீதமாக அதிகரிக்கும் என தெரிகிறது. ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் அடிப்படை வசதிகளை தருவது அவசியம். குறிப்பாக மூத்த குடிமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தரவேண்டும் என ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது" என்று அந்த மனுவில் கூறியிருந்தார்.

இந்தவழக்குநீதிபதிகள் சுப்பிரமணியன், விக்டோரியா கவுரி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், சட்டப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முதியோர் காப்பகத்தை யாவது அரசு நடத்த வேண்டும். ஆனால் பெரும்பாலும் தனியார் தொண்டு நிறுவனங்களால்தான் நடத்தப்பட்டு வருகின்றன. இது ஏற்புடையதல்ல. எனவே தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு முதியோர் இல்லமாவது கட்டுவதற்கான பணிகளை 6 மாதத்தில் தொடங்க வேண்டும் என உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தனர்.

# வாஷிங் மெஷினில் போட்டு மூடி 3 வயது குழந்தை படுகொலை: எதிர்வீட்டு பெண் கைது



ராதாபுரம், செப். 11

நெல்லை மாவட்டம் ராதாபுரம் அருகே உள்ள ஆத்துக்குறிச்சி கீழத்தெருவைச் சேர்ந்தவர் விக்னேஷ்(வயது 36). இவருடைய மனைவி ரம்யா. இவர்களது 3 வயது ஆண் குழந்தை சஞ்சய். அங்குள்ள அங்கன்வாடிக்கு சென்று வந்தான்.

இவர்களின் எதிர்வீட்டில் வசிப்பவர் தங்கம்மாள்(49). இந்த 2 குடும்பத்தினருக்கும்இடையே ஏற்கனவே குழாயில் தண்ணீர் பிடிப்பது உள்ளிட்டவை தொடர்பாகசிறிய, சிறிய தகராறுகள் இருந்து வந்ததாககூறப்படுகிறது.

சஞ்சய் வீட்டின் வெளியே விளையாடிக் கொண்டு இருந்தான். பின்னர் பெற்றோர் தங்களது குழந்தையை அங்கன்வாடிக்கு அழைத்து செல்வதற்காக தேடினார்கள். ஆனால், கண்டுபிடிக்க முடியவில்லை. இதுகுறித்து விக்னேஷ் ராதாபுரம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

அதன்பேரில், போலீசார் ஆத்துக்குறிச்சி கிராமத்திற்கு விரைந்து சென்றனர். அங்குள்ள ஒவ்வொரு வீடாக சல்லடைப்போட்டு தேடினார்கள்.

அப்போது, தங்கம்மாள் வீட்டிற்குள் போலீசார் நுழைந்தனர். அதை அறிந்த அவர் தனது வீட்டின் பின்பக்கமாக தப்பி ஓடினார். உடனடியாக போலீசார் விரைந்து செயல்பட்டு அவரை பிடித்தனர்.

பின்னர்அவரிடம் விசாரணை நடத்தினார்கள். அப்போது, குழந்தையை வாஷிங் மெஷினில் போட்டு வைத்திருப்பதாக அவர் தெரிவித்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த போலீசார், வாஷிங் மெஷினை திறந்து பார்த்தனர்.

அதில் சாக்கு மூட்டையில் கட்டி இருந்த சஞ்சயை பிணமாக மீட்டனர். அவனது உடலை பார்த்து குடும்பத்தினர் கதறி துடித்தது பரிதாபத்தை ஏற்படுத்தியது. பின்னர் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக நாகர்கோவில் ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள்.

இந்த சம்பவம் குறித்து போலீசார் நடத்திய விசாரணையில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. தங்கம்மாளின் மகன் கடந்த சில மாதங்களுக்கு முன் நடந்த விபத்தில் இறந்துவிட்டார். இதனால் அவர் சற்று மனநலம் பாதிக்கப்பட்டு இருந்ததாக தெரிகிறது. தங்கம்மாள் மகனின் துக்க நிகழ்ச்சிக்கு விக்னேஷ் குடும்பத்தினர் வரவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் தனது மகன் இறந்ததற்கு விக்னேஷ் குடும்பத்தினர் செய்வினை வைத்ததே காரணம் என்றும், இதனால் அவரது குடும்பத்தினரை பழிவாங்க தங்கம்மாள் காத்துக்கொண்டு இருந்ததாகவும் கூறப்படுகிறது.

தங்கம்மாள் வீட்டின் முன் சஞ்சய் விளையாடிக் கொண்டு இருந்தான். அவனை வீட்டிற்கு அழைத்து சென்ற தங்கம்மாள் ஒரு சாக்கு மூட்டையில் போட்டு கட்டினார். பின்னர் வாஷிங் மெஷினில் போட்டு மூடியைக்கொண்டு மூடினார். இதில் மூச்சுத்திணறிய குழந்தை பரிதாபமாக இறந்தது போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

இந்த படுகொலை குறித்து போலீசார் வழக்குப்பதிந்துதங்கம்மாளை கைது செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

ராதாபுரம் அருகே சாக்குமூட்டையில் கட்டி வாஷிங் மெஷினில் போட்டு மூடி 3 வயது குழந்தை படுகொலை செய்யப்பட்ட பயங்கர சம்பவம் பெரும் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# பராமரிப்பு பணி: கடற்கரை தாம்பரம் இடையே இரவு நேர மின்சார ரெயில்கள் சேவையில் மாற்றம்

சென்னை, செப். 11

சென்னை கடற்கரை விழுப்புரம் வழித்தடத்தில் கடற்கரை எழும்பூர் ரெயில் நிலையங்கள் இடையே இன்று (செவ்வாய்க்கிழமை) மற்றும் நாளை (புதன்கிழமை) இரவு 10.40 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரையில் (5 மணி நேரம் 50 நிமிடம்) பராமரிப்பு பணி நடைபெறுவதால் சில மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுவதாகவும், பகுதி நேர ரத்து செய்யப்படுவதாகவும் தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை கடற்கரையிலிருந்து இன்று மற்றும் நாளை இரவு 8.25, 8.55, 10.20 ஆகிய நேரங்களில் புறப்பட்டு தாம்பரம் செல்லும் மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகிறது.

சென்னை கடற்கரையிலிருந்து 10,11ம் தேதிகளில் இரவு 7.50 மணிக்கு புறப்பட்டு திருவள்ளூர் செல்லும் மின்சார ரெயிலும், இதே தேதிகளில் காலை 4.05 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் செல்லும் மின்சார ரெயிலும், இதே தேதிகளில் இரவு 10.45 மணிக்கு புறப்பட்டு கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரெயிலும் ரத்து செய்யப்படுகிறது.

திருவள்ளூரில் இருந்து 10,11ம் தேதிகளில் இரவு 9.35 மணிக்கு புறப்பட்டு சென்னைகடற்கரைவரும் மின்சார ரெயில் ரத்து செய்யப்படுகிறது. கும்மிடிப்பூண்டியிலிருந்து இதே தேதிகளில் இரவு 9.55 மணிக்கு புறப்பட்டு சென்னைகடற்கரை வரும் மின்சார ரெயில் ரத்து செய்யப்படுகிறது.

சென்னை கடற்கரையிலிருந்து 10,11ம் தேதிகளில் இரவு 11.05, 11.30, 11.59 ஆகிய நேரங்களில் புறப்பட்டு தாம்பரம் செல்லும் மின்சார ரெயில்கள் சென்னை கடற்கரை எழும்பூர் இடையே பகுதி நேரமாக ரத்து செய்யப்பட்டு, எழும்பூரில் இருந்து இயக்கப்படும்.

சென்னை கடற்கரையிலிருந்து 10,11ம் தேதிகளில் காலை 3.55 மணிக்கு புறப்பட்டு செங்கல்பட்டு செல்லும் மின்சார ரெயில் சென்னைகடற்கரைஎழும்பூர் இடையே பகுதி நேர ரத்து செய்யப்பட்டு, எழும்பூரில் இருந்து இயக்கப்படும்.

செங்கல்பட்டிலிருந்து 10,11ம் தேதிகளில் இரவு 9.10, 10.10, 11 ஆகிய நேரங்களில் புறப்பட்டு சென்னைகடற்கரைவரும் மின்சார ரெயில் சென்னை எழும்பூர் கடற்கரை இடையே பகுதி நேர ரத்து செய்யப்பட்டு, எழும்பூரில் நிறுத்தப்படும்.

திருமால்பூரில் இருந்து இதே தேதிகளில் இரவு 8 மணிக்கு புறப்பட்டு சென்னைகடற்கரைவரும் மின்சார ரெயில் சென்னை எழும்பூர் கடற்கரை இடையே பகுதி நேர ரத்து செய்யப்பட்டு, எழும்பூரில் நிறுத்தப்படும்.

கூடுவாஞ்சேரியிலிருந்து இதே தேதிகளில் இரவு 10.10, 10.40, 11.15 ஆகிய நேரங்களில் புறப்பட்டு சென்னைகடற்கரை வரும் மின்சார ரெயில் தாம்பரம் சென்னை கடற்கரை இடையே பகுதி நேர ரத்து செய்யப்பட்டு, தாம்பரத்தில் நிறுத்தப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகனி 11.9.2024

# 'குபேரா' படத்தின் சிறப்பு போஸ்டர் வைரல்




தனுஷ், நாகர்ஜுனா நடித்துள்ள 'குபேரா' படத்தின் சிறப்பு போஸ்டர் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

சேகர் கம்முலா இயக்கத்தில் உருவாகும் 'குபேரா' படம் தனுஷின் 51வது படமாக உருவாகிறது. ஸ்ரீவெங்கடேஸ்வரா சினிமாஸ் தயாரிக்கும் இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி என மூன்று மொழிகளில் ஒரே நேரத்தில் உருவாகிறது. இந்தப் படத்தின் கதாநாயகியாக ராஷ்மிகா மந்தனா நடிக்க தெலுங்கு முன்னணி நடிகர் நாகர்ஜுனா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். தேவி ஸ்ரீபிரசாத் இசையமைக்கிறார்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு திருப்பதி, தாய்லாந்து, மும்பை பகுதிகளில் நடைபெற்று முடிந்தது. தற்போது அடுத்தக்கட்ட படப்பிடிப்பு ஹைதராபாத்தில் துவங்கியுள்ளது.

இந்நிலையில் இப்படத்தின் புதிய போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. பணம், நெருப்பு இடம்பெற்றுள்ள இந்த போஸ்டரில் தனுஷின் தோற்றம், நாகர்ஜுனாவின் புதிய லுக்கும் ரசிகர்களிடையே கவனம் பெற்று வருகிறது.

# நடிகர் லால் மீது பெண் இயக்குநர் குற்றச்சாட்டு



கேரளாவில் மலையாள திரையுலகில் நடிகைகளுக்கு எதிரான பாலியல் தொல்லை குறித்து ஓய்வு பெற்ற நீதிபதி ஹேமா தலைமையிலான குழுவின் அறிக்கை சமீபத்தில் வெளியானது. இந்த அறிக்கையில் நடிகைகளுக்கும், பெண் கலைஞர்களுக்கும் பாலியல் தொல்லை இருப்பதாகவும், இதில் மாபியா கும்பல் தலையீடு இருப்பதாகவும் பகீர்தகவலை வெளியிட்டிருந்தது.

இதனை தொடர்ந்து நடிகர்கள், இயக்குனர்கள், தயாரிப்பாளர்களுக்கு எதிராக பாலியல் புகார்கள் அடுத்தடுத்து வெளியாகி வருகிறது. இது மலையாள திரையுலகில் பல்வேறு அதிரடி திருப்பங்களையும், அதிர்வலைகளையும் ஏற்படுத்தி உள்ளது. பாலியல் புகார் நடிகர் சங்கத்தில் உள்ள சிலர் மீதும் எழுந்ததால் மலையாள நடிகர் சங்க தலைவர் மோகன்லால் உள்பட நிர்வாகிகள் தங்கள் பதவியை கூண்டோடு ராஜினாமா செய்தனர். இதற்கிடையே பாதிக்கப்பட்ட நடிகைகள் அரசு அமைத்த சிறப்பு விசாரணை குழுவிடம் ரகசியமாக வாக்குமூலம் அளித்து வருகின்றனர்.

நடிகர்கள் சித்திக், ஜெயசூர்யா, முகேஷ், இடவேல பாபு உள்ளிட்ட பல பிரபலங்கள் மேல் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், சில நாள்களுக்கு முன் நடிகர் நிவின் பாலி மீதும் பாலியல் வன்கொடுமை வழக்குப் பதியப்பட்டது.

இந்த நிலையில், யூடியூப் நேர்காணல் ஒன்றில் பேசிய பெண் இயக்குநர் ரேவதி எஸ். வர்மா பிரபல மலையாள நடிகர் லால் மீது குற்றச்சாட்டை வைத்துள்ளார். ரேவதி தமிழில் ஜூன். ஆர், மலையாளத்தில் 'மாட் மேட்' உள்ளிட்ட படங்களை இயக்கியவர். நேர்காணலில் பேசியபோது, 'மாட் மேட் படப்பிடிப்பின்போது நடிகர் லால், நான் பெண் என்கிற காரணத்தாலே என்னை மோசமான முறையில் நடத்தினார். காட்சிகளை எடுப்பதற்கு முன் இயக்குநராக நான் சொல்வதைக் கேட்காமல் படப்பிடிப்பு தளத்தில் அவமரியாதை செய்தார்.

பலமுறை இதை அனுபவித்தேன். அவருடன் சேர்ந்துகொண்டு இன்னும் சில முக்கிய நடிகர்களும் இதையே செய்தனர்.

குறிப்பாக, அப்படப்பிடிப்பில் அவர்களிடம், 'நான் ஷாட் ஒகே சொன்னதற்குப் பின் நாற்காலியில் அமர்ந்தால்போதும்' என சொன்னேன். அதற்கு ஒருவர், 'நீங்கள் சொல்வதைக் கேட்பதற்குப் பதில் கழிவறையில்போய்அமர்ந்துகொள்ளலாம்'என்றார். இதைக்கேட்டுகோபத்தால்மயக்கம்அடைந்துவிட்டேன். ஹேமாகமிட்டி அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயரை மறைப்பது பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைத்த அநீதி. " எனக் கூறியுள்ளார்.

லால் தமிழில் சண்டக்கோழி, கர்ணன், மாமன்னன் உள்ளிட்ட படங்களில் நடித்து பாராட்டுகளைப் பெற்றவர். அவர், பெண் இயக்குநரை அவமரியாதை செய்தது ரசிகர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. .

# ஷாருக்கான் படத்தில் நடிக்க மறுத்த கமல்ஹாசன்



பாலிவுட் சினிமாவின் முன்னணி நடிகராக இருப்பவர் ஷாருக்கான். இவரது நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான பதான், ஜவான் மற்றும் டுங்கி ஆகிய படங்கள் மிகப்பெரிய வெற்றியடைந்தன. தற்போது கிங் படத்தில் நடித்து வருகிறார்.

கடந்த 2002ம் ஆண்டு ஷாருக்கான் நடிப்பில் வெளியான படம் மெயி ஹூன் நா. பரா கான் இயக்கிய இப்படத்தில் சுஷ்மிதா சென், அம்ரிதா ராவ், சுனில் ஷெட்டி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தனர். சமீபத்தில் ஒரு நேர்காணலில் இயக்குனர் பரா கான், இப்படத்தில் வில்லனாக நடிக்க முதலில் கமல்ஹாசனை அனுகியதாக கூறினார். இருந்தபோதும் கமல் அதில் நடிக்க மறுத்திருக்கிறார். இது குறித்து அவர் கூறுகையில்,

'நான் கமல்ஹாசனை சந்தித்து பேச சென்னை சென்றிருந்தேன். அப்போது அவர் என்னை தனது அலுவலகத்திற்கு அழைத்து சென்று மதிய உணவு வழங்கினார். அப்போது படத்தில் நடிப்பது குறித்து பேசினேன். ஆனால், அவர் அந்த பாத்திரத்தில் நடிக்க மறுத்துவிட்டார்,என்றார்.

பின்னர்தான், அந்த பாத்திரத்தில் நடிக்க சுனில் ஷெட்டியை தேர்ந்தெடுத்திருக்கிறார் இயக்குனர் பரா கான். கமல்ஹாசன் தற்போது மணிரத்னம் இயக்கத்தில் 'தக் லைப்' படத்தில் நடித்து வருகிறார். 36 வருடங்களுக்குப் பிறகு கமல்ஹாசன் மணிரத்னம் கூட்டணி இணைந்துள்ளது. திரிஷா, சிம்பு, ஜோஜு ஜார்ஜ், ஐஸ்வர்யா லட்சுமி, கவுதம் கார்த்திக் உள்ளிட்ட பலர் இப்படத்தில் நடிக்கின்றனர். இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் படத்துக்கு இசையமைக்கிறார்.

# திரைத்துறை பாலியல் புகார் குறித்து ஊடகங்களில் பேச வேண்டாம்; நடிகர் சங்கத்தில் புகாரளியுங்கள் நடிகை ரோகிணி



தென்னிந்திய நடிகர் சங்க 68வது பொதுக்குழு கூட்டம் தேனாம்பேட்டை காமராஜர் அரங்கத்தில் இன்று நடைபெற்றது. நடிகர் சங்க தலைவர் நாசர் தலைமையிலான இந்த பொதுக்குழு கூட்டத்தில் ஏராளமான திரைக்கலைஞர்கள் பங்கேற்றனர்.

கேரளாவின் ஹேமா கமிட்டி போன்று தமிழ் திரையுலகிலும் கமிட்டி அமைப்பது குறித்தும், தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்துடனான மோதல் போக்கு குறித்தும் விவாதிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியானது.

இந்நிலையில், தென்னிந்திய நடிகர் சங்க நிர்வாகிகளின் பதவி காலத்தை மேலும் 3 ஆண்டுகள் நீட்டித்து, பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தேர்தல் பணிகளை தொடர்ந்தால் நடிகர் சங்க கட்டட பணிகள் பாதிக்கும் என்பதால் இந்த முடிவு என நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

செய்தியாளர்களை சந்தித்த நடிகர் சங்கத் தலைவர் நாசர் கூறுகையில், "பொதுக்குழு முன்பாக இருந்த சவால்களை மீறி பொதுக்குழு கூட்டம் நடந்துள்ளது. பொதுக்குழு மகிழ்ச்சியாக நடந்துள்ளது. சங்கர தாஸ் சுவாமிகள் பெயரில் டெல்லி கணேஷ், விஜயகுமாரி மற்றும் நாடக கலைஞர்கள் கவுரவிக்கப்பட்டார்கள். 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது" என்றார்.

நடிகைகளுக்கு பாலியல் புகார் குறித்து நடிகை ரோகிணி பேசுகையில்," 2019ம் ஆண்டிலேயே கமிட்டி உருவாக்கப்பட்டுள்ளது. நடிகர், நடிகை மட்டுமின்றி எல்லாரும் புகார் கொடுக்கலாம். பாலியல் புகார் குறித்து ஊடகங்களில் பேச வேண்டாம், நடிகர் சங்கத்தில் புகாரளியுங்கள். வழக்கறிஞர்கள், மனநல ஆலோசகர்கள், தன்னார்வலர்களும் இந்த கமிட்டியில் உள்ளனர். புகாருக்கு உள்ளான நபர் 5 ஆண்டுகள் நடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. புகார்குறித்துவெளியேதெரிவிக்கப்படாது. எந்தபெண்ணும்பயத்துடன்இருக்கக்கூடாது. எந்த நடிகையும் தைரியமாக புகார் கூறலாம். புகார்களை தெரிவிப்பதற்கு எண்ணையும், இமெயிலையும் வழங்கி இருக்கிறோம். நடிகை மீதான புகார் பெரிதுபடுத்தப்படுகிறது. நடிகை கூறும் புகார் மட்டும் திரும்ப திரும்ப பேசப்படுகிறது. எல்லா துறையிலும் அத்துமீறல் இருக்கிறது" என்றார்.

# ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி: ஜப்பானை வீழ்த்தியது இந்தியா



8வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டி சீனாவின் ஹூலுன்பியர் நகரில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 6 அணிகள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைபிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு தகுதி பெறும்.

தனது தொடக்க ஆட்டத்தில் சீனாவை 30 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த நடப்பு சாம்பியனான இந்திய அணி நேற்று ஜப்பானை எதிர்கொண்டது. இதில் தொடக்கம் முதலே ஆக்ரோஷமாக விளையாடிய இந்திய வீரர்கள் முதல் 3 நிமிடங்களுக்குள் 2 கோல் (சுக்ஜீத் சிங், அபிஷேக்) கோல் போட்டு மிரள வைத்தனர்.

இதனால் இந்தியாவின் தாக்குதல் யுக்தியை சமாளிக்க ஜப்பான் வீரர்கள் தடுப்பாட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டி இருந்தது. ஆனாலும் இந்திய வீரர்களின் கோல் மழை ஓயவில்லை. 17வது நிமிடத்தில் சஞ்சய், 54வது நிமிடத்தில் உத்தம்சிங், 60வது நிமிடத்தில் மறுபடியும் சுக்ஜீத் சிங் கோல் அடித்தனர். இதற்கிடையே ஜப்பான் தரப்பில் மோட்சுமோட்டோ 41வது நிமிடத்தில் கோல் திருப்பினார்.

முடிவில் இந்தியா 51 என்ற கோல் கணக்கில் ஜப்பானை துவம்சம் செய்து 2வது வெற்றியை பெற்றது. ஆட்டநாயகன் விருது பெற்ற இந்திய வீரர் அபிஷேக் கூறுகையில், 'இது அணியின் முழுமையான கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி. தாக்குதல் ஆட்டத்தை சிறப்பாக மேற்கொண்டு, இலக்கை சரியாக எட்டினோம். ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது' என்று குறிப்பிட்டார்.

மற்றொரு ஆட்டத்தில் சீனா 42 என்ற கோல் கணக்கில் மலேசியாவை பதம் பார்த்தது. பாகிஸ்தான் தென்கொரியா இடையிலான ஆட்டம் 22 என்ற கோல் கணக்கில் 'டிரா'வில் முடிந்தது.

போட்டியில் இன்று ஓய்வு நாளாகும். இந்திய அணி அடுத்த ஆட்டத்தில் நாளை மலேசியாவை எதிர்கொள்கிறது. கடந்த ஆண்டு இறுதி ஆட்டத்தில் இந்திய அணி இதே மலேசியாவை வீழ்த்தி இருந்தது நினைவு கூரத்தக்கது.

# ஓவல் டெஸ்ட்: பதும் நிசங்கா சதம்.. ஆறுதல் வெற்றி பெற்ற இலங்கை



இங்கிலாந்து நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்த தொடரின் முதல் இரு போட்டிகளில் இங்கிலாந்து அணி ஆதிக்கம் செலுத்தியது.

இதன் மூலம் இரு போட்டிகளில் வென்று தொடரையும் கைப்பற்றியது.

இந்த நிலையில், இரு அணிகள் இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி கடந்த 6 ஆம் தேதி துவங்கியது. இந்த போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 325 ரன்களை எடுத்து ஆல் அவுட் ஆனது. இதைத் தொடர்ந்து பேட் செய்த இலங்கை அணி 263 ரன்களை எடுத்தது.

பிறகு, இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி அதிர்ச்சி அளிக்கும் வகையில் 156 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதைத் தொடர்ந்து 219 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது.

இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணியின் பதும் நிசங்கா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவருடன் களமிறங்கிய திமுத் கருணரத்னே 8 ரன்களிலும், குசல் மெண்டிஸ் 39 ரன்களையும் எடுத்தனர். மறுபுறம் நிசங்கா சதம் அடிக்க, ஏஞ்சலோ மேத்யூஸ் 32 ரன்களை எடுத்த நிலையில், இலங்கை அணி 2 விக்கெட்டுகளை இழந்து 219 ரன்களை எடுத்து வெற்றி பெற்றது.

போட்டி முடிவில் பதும் நிசங்கா 127 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து சார்பில் க்ரிஸ் வோக்ஸ் மற்றும் கஸ் அட்கின்சன் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். இந்த தொடரின் முதல் இரு போட்டிகளில் வெற்றி பெற்று இங்கிலாந்து அணி தொடரை கைப்பற்றிய நிலையில், இலங்கை அணி மூன்றாவது போட்டியில் வெற்றி பெற்றது அந்த அணிக்கு ஆறுதலாக அமைந்தது.

# ஐபிஎல் அணியின் "blank cheque" ஆஃபரை நிராகரித்த ராகுல் டிராவிட்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான ராகுல் டிரவிட், இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக செயல்பட்டதால் ஐ.பி.எல். அணியில் பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டது. வெஸ்ட் இண்டீஸில் நடைபெற்ற டி20 உலகக் கோப்பையை இந்திய அணி வென்றது. அத்துடன் ராகுல் டிராவிட்டின் தலைமை பயிற்சியாளர் பதவியும் முடிவடைந்தது.

இதனைத்தொடர்ந்து ஐ.பி.எல். அணிகள் அவரை தலைமை பயிற்சியாளராக நியமிக்க முயற்சி செய்தது. அவர் ஏற்கனவே விளையாடிய ராஜஸ்தான் ராயல்ஸ் அணி, ராகுல் டிராவிட் எங்கள் அணியின் தலைமை பயிற்சியாளர் என அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இதற்கிடையே ராகுல் டிராவிட்டை தலைமை பயிற்சியாளர் பதவிக்கு அணுகியபோது, கையெழுத்திடாத செக்கை ராஜஸ்தான் ராயல்ஸ் அணி ராகுல் டிராவிட்டுக்கு கொடுக்க முன்வந்துள்ள நிலையில், அதை ராகுல் டிராவிட் புறக்கணித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.


அவர்அணிக்குமீண்டும்திரும்புவதைவிரும்பியதாலும், இதைஒருஉணர்ச்சிகரமானதாகஎடுத்துக்கொண்டதாலும் ஆஃபரை நிராகரித்துள்ளார்.

ராகுல் டிராவிட் 2011 முதல் 2013 வரை ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக 3 சீசனில் விளையாடியுள்ளார். வார்னே ஓய்வுக்குப்பின் இரண்டு சீசன்களில் கேப்டனாகவும் பணியாற்றியுள்ளார்.

ராஜஸ்தான் அணியில் இருந்து ஓய்வு பெற்றபின், இரண்டு சீசனில் அந்த அணியின் ஆலோசகராகவும் இருந்துள்ளார்.

# கொல்கத்தா அணியில் கம்பீருக்கு பதில் ஜாக் காலிஸ்...!



ஐபிஎல் கிரிக்கெட்டில் மும்பை இந்தியன்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகளுக்கு அடுத்தப்படியாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அதிகமுறை (3) சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. சுமார்10வருடத்திற்குப் பிறகு 2024 சீசனில் கொல்கத்தா அணி சாம்பியன் பட்டம் வென்றது. கவுதம் கம்பீர் கேப்டனாக இருந்த இரண்டு முறை வென்ற நிலையில், அவர் ஆலோசகராக இருக்கும்போது 3வது முறையாக வென்றுள்ளது.

தற்போது கவுதம் கம்பீர் இந்திய அணிக்கு தலைமை பயிற்சியாளராக சென்றுள்ளார். அத்துடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு சப்போர்ட் ஸ்டாஃப் ஆக பணிபுரிந்து வந்த அபிஷேக் நாயர் மற்றும் ரியான் டென் டஸ்கொதே ஆகியோரும் இந்திய அணியின் துணை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் கொல்கத்தா அணி ஆலோசகர் மற்றும் சப்போர்ட் ஸ்டாஃப் ஆகியோரை நியமிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

இந்த நிலையில் கிரிக்கெட்டி தலைசிறந்த வேகப்பந்து வீச்சு ஆல்ரவுண்டரான ஜாக் காலிஸை தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

ஜாக் காலிஸ் ஏற்கனவே கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் கோச்சிங் ஸ்டாஃப் ஆக இருந்துள்ளார். 2015ல் பொறுப்பு தலைமை பயிற்சியாளராக இருந்துள்ளார். அதேவருடத்தில் பேட்டிங் ஆலோசகராகவும் இருந்துள்ளார்.

கவுதம் கம்பீர் தலைமையின் கீழ் ஜாக் காலிஸ் 2012 மற்றும் 2014 சீசன்களில் விளையாடியுள்ளார். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ரிக்கி பாண்டிங், குமார் சங்கக்காரா ஆகியோரை நியமிக்க அதிக ஆர்வம் காட்டுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ரிக்கி பாண்டிங் டெல்லி அணியில் இருந்து வெளியேறியுள்ளார். சங்கக்காரா இன்னும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில்தான் நீடிக்கிறார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.